**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-060420224829

Volume: 6

Issue: 4

Month: April

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 17.01.2022

Accepted: 21.03.2022

Published: 01.04.2022

Citation:
Kumarakuruparan, K. "Fear in The Creation of The Protagonist in Kalaviyal - And the Problems That Arise in The Elimination of Fear." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 4, 2022, p. 99-03.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i4.4829

*Corresponding Author:
gurusaru86@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Fear in The Creation of The Protagonist in Kalaviyal - And the Problems that Arise in The Elimination of Fear

**Dr. K. Kumarakuruparan**

*Assistant Professor, Department of Tamil*

*Mannar Thirumalai Nayakkar College, Pasumalai, Madurai, Tamil Nadu, India*

*http://orcid.org/0000-0003-1949-6168*

**Abstract -** Tolkappiyar, when formulating the theory of kalaviyal, suppresses the whole biological elements of the Tamil society within it. The phrase 'see the bridge' does not appear to be sexual intercourse when looking at each other. Tolkappiyam mentions that when the couple sees each other for the sake of the order of the head, sexual desire appears and instinct occurs.

**Keywords:** Tolkappiyar, Theory of Kalaviyal, Tamil Biology, Sexual Desire, Tamil Society.

**References**

1. Tolkappiyar, Tolkappiyam.
2. Aravanthan, R., Creativity.

# களவியலில் தலைவி பாத்திர படைப்பாக்கத்தில் அச்சமும் – அச்சம் நீங்குதலில் எழும் சிக்கல்களும்

*முனைவர் க. குமரகுருபரன்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை

***ஆய்வுச்சுருக்கம்***
*தொல்காப்பியர் களவியல் கோட்பாட்டை உருவாக்கும் பொழுது தமிழ்ச் சமூகத்தின் ஒட்டு மொத்த வாழ்வியல் கூறுகளையும் அதனுள் அடக்குகிறார். பாலதாணையின் காண்ப என்கின்ற சொற்றொடர், ஒருவரையொருவர் கண்டுழியெல்லாம் புணர்ச்சி வேட்கை தோன்றாது. தலைவன் தலைவிபாலது ஆணையின் பொருட்டு ஒருவரை ஒருவர் காணும் பொழுது புணர்ச்சி வேட்கைத் தோன்றி உள்ளப்புணர்ச்சி நிகழ்வதாக குறிப்பிடுகிறது தொல்காப்பியம்.*
***திறவுச் சொற்கள்:*** *தொல்காப்பியர், களவியல் கோட்பாடு, தமிழ் வாழ்வியல், புணர்ச்சி வேட்கை, தமிழ்ச்சமூகம்*

தொல்காப்பியர் களவியல் கோட்பாட்டை உருவாக்கும்பொழுது தமிழ்ச்சமூகத்தின் ஒட்டுமொத்த வாழ்வியல் கூறுகளையும் அதனுள் அடக்குகிறார். பாலதாணையின் காண்ப என்கின்ற சொற்றொடர், ஒருவரையொருவர் கண்டுழியெல்லாம் புணர்ச்சி வேட்கை தோன்றாது. தலைவன் தலைவி பாலது ஆணையின் பொருட்டு ஒருவரை ஒருவர் காணும்பொழுது புணர்ச்சி வேட்கைத் தோன்றி உள்ளப்புணர்ச்சி நிகழ்வதாகக் குறிப்பிடும் தொல்காப்பியம்.

**ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பால தாணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
**மிக்கோ னாயினுங் கடிவரை இன்றே -**
**(பொருள். கள:2)**

என்ற நூற்பா வழி களவுக் காலத்தில் தலைவனும் தலைவியும் சந்திப்பு நிகழ்ந்த தன்மை பாலதாணையே. இருவர் உள்ளமும் பிறப்பு தோறும் ஒன்றி நல்வினைக் கண்ணே நிகழ்ந்த ஊழின் ஆணையே கூட்டுவிக்கின்றது. தலைவன் தலைவியின் உள்ளப்புணர்ச்சியே களவு வாழ்க்கையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு பாங்கற் கூட்டம் பாங்கியர் கூட்டம் என்று களவியல் கோட்பாடு தொல்காப்பியத்தில் அமைகின்றது. களவு வாழ்வில் தலைவியின் பண்பு நலன்கள் முதன்மையானதாகக் கருதப்படுகின்றன.

## தலைவியின் பண்புகள்

மனித இனத்தில் ஆண் பெண் என்ற வேறுபாட்டில் பெண் என்பவள் இயல்பாகவே மென்மைத்தன்மை உடையவளாக அமைகின்றாள். தொல்காப்பியர் பெண் இயல்புகளை, முதன்மையான பண்புகளாக சுட்டுகிறார்.

**அச்சமும் நாணமும் மடமும் முந்துறுத்த**
**நிச்சமும் பெண்பாற் குரிய**
**(பொருள். கள:8)**

என்ற நூற்பா வழி பெண் என்பவள் அச்சம், நாணம், மடம் பொருந்தியவள். இப்பண்புகளே பெண் தன்மையை வெளிப்படுத்துவதாகக் குறிப்பிடுகிறார். பெண்ணுக்குரிய முதன்மையான பண்புகளில் அச்சம் குறிப்பிடப்பட்டுள்ளது. தலைவியின் ஆயம் பகற்பொழுதில், ஏழு

பருவ மகளிரும் கூட்டமாக கூடி தினைப்புனம் காத்தல், நீராடுதல், மலர் தொடுத்து மாலையாக தொகுத்தல் போன்ற பல்வேறு நிகழ்வுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்பொழுது எங்கிருந்தோ தலைவன் தான் வேட்டையாடிய விலங்கை தேடி வருவது போல அக்கூட்டத்தை அணுகுகிறான். தலைவனைக் கண்ட ஆயம் மகளிர் வினாக்களை வினவ, தலைவி மட்டும் அவனைக் கண்ணுற்ற மறுகணத்தில் அச்சத்துடன் தன்னை ஆயமகளிரிடையே மறைத்துக் கொள்கிறாள். இலைமறை காய்மறை என மறைந்து கண்ணுற்று நோக்குகிறாள். தலைவியைக் கண்ட தலைவனுக்கு சில ஐயம் ஏற்படுகிறது.

**சிறந்து உரையையும் சிறந்தது என்ப**
**இழிந்துழி இழிவே சுட்ட லான**
***(பொருள். கள:3)***

என்ற நூற்பாவில் தலைவன் தலைவியைச் சந்தித்த மறு கணத்தில் ஐயம் தோன்றுதல் சிறந்தது என்று சுட்டுகிறார். யாருக்கு ஐயம் தோன்ற வேண்டுமென்றால் தலைவனுக்கு மட்டுமே ஐயம் தோன்ற வேண்டும். தலைவிக்கு ஐயம் தோன்றவில்லையா? என்பது இவ்விடத்து எழுகின்ற சிக்கல். இச்சிக்கலை விளக்கும்வகையில் கட்டுரை அமைந்துள்ளது.

தலைவனுக்குத் தோன்றும் ஐயம் என்ன? உருவ மிகுதியுடையவளாக, தோற்றப் பொலிவுடையவளாக ஆயத்தாரிடையே தலைவியைக் காணும்பொழுது தெய்வம் நிலை பெற்றதோ? என்ற எண்ணம் மேலிடுகிறது. தலைவி மானிடப் பெண்ணோ தேவலோக தெய்வப் பெண்ணோ? என்ற ஐயம் தோன்றுகிறது. இவ்வகை ஐயம் பார்க்கும் அனைவரிடத்தும் தோன்றுமோ? என்றால் தோன்றாது. பாலது ஆணையின் பொருட்டு ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் மட்டுமே காணுகின்றபொழுது, தலைவனுக்கு ஐயம் ஏற்படும் என்று தொல்காப்பியர் சுட்டுகிறார். ஐயம் ஏற்பட்டவுடன், அதனைக் களைவதற்குரிய கருவிகளாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**வண்டே இறையே வள்ளி பூவே**
**கண்ணே அலமரல் இணைப்பே அச்சம் என்று**
**அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ**
**நின்றவை களையும் கருவி என்ப**
***(பொருள். கள:4)***

என்ற நூற்பாவின் வழி தலைவனுக்கு ஏற்பட்ட ஐயத்தைக் களையக்கூடிய கருவிகளாகச் சில கூறுகளைக் குறிப்பிடுகிறார். என்ன கருவிகள் அவை? மானிடப் பெண்ணின் இயல்புகளை முன்னிறுத்தி ஐயத்தைக் களைவதற்கு முற்படுகிறார். தலைவியின் தலையில் அணிந்துள்ள பூவைச் சூழும் வண்டு, அணிந்துள்ள அணிகலன்கள், வள்ளி என்பது உடலில் எழுதிய கொடி. அலமரல் என்பது தடுமாற்றம். தெய்வமாயின் நின்ற வழி நிற்கும், அவ்வாறின்றி நின்றுழி நிற்கின்றிலள் என்று சுழற்சியும் அறிதற்குரிய கருவியாகக் கருதப்பட்டது. இமை என்பது கண் இமைத்தல். தெய்வத்திற்குக் கண் இமையாமையின் அறிதற்குரிய கருவி ஆயிற்று. அச்சம் என்பது ஆண் மக்களைக் கண்டு அஞ்சுதல். அது தெய்வத்திற்கு இன்மையான் அதுவும் அறிதற்குரிய கருவியாய் அமைந்தது. அன்னவை பிறவும் என்றதனால் கால் நிலம் தோய்தல், வியர்த்தல், நிழல் ஆடுதல் போன்றவைகளும் கருவிகளாக தலைவனால் கண்டு அறியப்பட்டு உள்ளப்புணர்ச்சி நிகழ்வதற்கு ஏதுவாக, வாயிலாக அமைவதை அறிய முடிகின்றது. தலைமகளின் முதன்மையான பண்புகளில் ஒன்றாகிய அச்சம் என்பது தலைமகனின் ஐயம் களையும் கருவியாக அமைவதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தலைவியிடம் தோன்றும் அச்சமே தலைவனது உள்ளத் துணிவை உறுதிப்படுத்துகிறது.

**அச்சம் நீங்குதல்**

பெண்மை என்பதன் பொருள் மேற்சுட்டிய பண்பு நலன்களை இழக்காது இருத்தல் என்று தொல்காப்பியர் இலக்கணம் வகுத்திருக்கிறார். தொல்காப்பியரே அச்சம் நீங்கலும் பெண்மைக்குரிய பண்பாக இலக்கணம் சுட்டுகிறார். அச்சம் நீங்குதற்குரிய இடங்கள் எவையெவை என்பதை விளக்குகிறார். பெண்ணின் இயல்பாக அமையும் அச்சம். களவின் அடுத்த நிலை வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் அச்சம் எப்பொழுது நீங்கப்பெறும் என்றால் தலைவன் மேல் தலைவியோ? தலைவி மேல் தலைவனோ? வேட்கை கொள்ளுமிடத்து நீங்கப் பெறும் என்கிறார். தலைவன்தலைவி எடுத்துக்கொண்டிருக்கும் வேட்கைக்கு அச்சம் தடையாக இருப்பதால், வேட்கை காலத்து மட்டும் அச்சம் நீங்கப் பெறலாம் என்று இலக்கணம் வகுத்திருக்கிறார்.

**காமத் திணையின் கண் நின்று வரூஉம்**
**நாணும் மடனும் பெண்மைய ஆகலின்**
**குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை**
**நெறிப்பட வாரா அவள்வயின் ஆன**
**(பொருள். கள:17)**

என்ற களவியல் நூற்பாவில் தன்னுடைய தலைவன் மீதான வேட்கையினைத் தலைவி குறிப்பினால் மட்டுமே எடுத்துரைத்தல் வேண்டும். நேரடியாக வேட்கை உரைத்தல் பெண்மையின் இயல்புக்கு மாறானது என்று குறிப்பிடுகிறார். இந்நூற்பாவிற்கு உரை எழுதிய இளம்பூரணர் அச்சமும் இயல்பற்றோ வெனின் அதுவும் வேட்கைக் குறிப்பினான் நீங்கும் என்ப என்று விளக்கம் தருகிறார். தலைவி தன் வேட்கையினைக் குறிப்பினால் சுட்டுவதற்கு, அவள் பண்பு நலன்களின் ஒன்றான அச்சம் களைதல் அவசியமானதாகக் கருதப்படுகிறது. வேட்கையின் பொருட்டு அச்சம் நீங்கியது. அதனோடு கூறப்படும் நாணமும் மடனும் நீங்காதோ? என்ற வினா இயல்பாக தோன்றுகிறது. இதற்குத் தொல்காப்பியர் விளக்கம் தருகிறார். அவை

**காமஞ் சொல்லா நாட்டம் இன்மையின்**
**ஏமுற இரண்டும் உளவென மொழிப**
**(பொருள். கள:18)**

என்ற நூற்பாவின் வழி தலைவியின் தலைசிறந்த பண்புகளாகக் கருதப்படும் நாணும் மடனும் இயக்கத்தின் பொருட்டும் நீங்காமல் இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடுகிறார். தலைமகற்கு ஏமமாதரற் பொருட்டு நீங்காது என்றும் நாணும் மடனும் இல்லாதாரைத் தலைமக்கள் அவமதிப்பாராதலால் நீங்கா என்றும் இளம்பூரணர் குறிப்பிடுகிறார். தலைவிக்கு காவலாய் அமைவது நாணம். மடன் என்றல்லாமல் தலைமகற்கு அது ஏமம் ஆகும் என்று கூறப்படுவதன் மூலம் இவ்விதிகள் பெண்மையை பெண்மையாக நிலைநிறுத்தும் பண்புகளாகக் கருதப்படுகின்றன.

**வேட்கை அச்சம்**

தலைவி தலைவன்மீது கொண்ட வேட்கையினை நேரடியாக வெளிப்படுத்தல் கூடாது. வேட்கையைத் தலைவனுக்கு உணர்த்த எண்ணினால், அதனை குறிப்பால் மட்டுமே புலப்படுத்த வேண்டும். வேட்கையை உணர்த்துவதற்கு அச்சம் என்ற பண்பு இடையூறாக தோன்றும். தலைவன் இயற்கைப் புணர்ச்சி கருதி கூறும் சொல் கேட்டு தலைவி எதிர் மொழிதல் கூடாது.

**சொல் எதிர் மொழிதல் அருமைத் காதலின்**
**அல்ல கூற்று மொழி அவள்வைபி னான**
**(பொருள். கள:19)**

என்ற நூற்பாவின் வழி தொல்காப்பியர் தலைவி தன் வேட்கையைக் குறிப்பினால் வெளிப்படுத்தினாள் என்றும் அதற்கு உடன்படுதல் என்ற நெறியினைக் குறிப்பினால் வெளிப்படுத்த, உடன்பாடல்லாத கூற்று மொழி நிகழ்த்துதல் தலைவிடத்து நிகழ வேண்டும் என்று குறிப்பிடுகிறார். தலைவன் வேட்கையைக் கூறியபின் தலைவி அதற்கு உடன்பட்டாலும் உடன்பட்டது போன்று தன் வேட்கையினைக் கூறுதல் கூடாது என்பதே தலைவிக்குக் கூறப்பட்ட இலக்கணமாகும்,

**தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்**
**எண்ணுங் காலை கிழத்திக் கில்லைப்**
**பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்**
**பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப**

என்ற நூற்பா வழி தலைவி தன் வேட்கையை வெளிப்படையாக இயம்புதல் கூடாது என்பது தொல்காப்பியர் விதி. தலைவன் முன்பு தான் எண்ணுகின்றபோது வேட்கையைக் கூறுதல் தலைவிக்கு இல்லை என்றபொழுதும் தலைவி அங்ஙனம் சொல்லாவிடத்தும் புதுக்கலத்தின்கட் பெய்த நீர் போலப் புறம் பொசிந்து காட்டும் உணர்வு உடையது தலைவியன் வேட்கை என்று குறிப்பிடுகிறார். இதை எழுத்து மரபாகக்கொண்டு தலைவியின் பண்புகளைப் படைத்துள்ளனர்.

**கண்ணொடு கண்இணை நோக்கொக்கின்**
**வாய்சொற்கள் என்ன பயனும் இல**

என்ற குறள் அகத்தே நிகழ்கிற வேட்கையைக் கண்ணாலே புலப்படுத்தலாம், வாய்சொற்கள் தேவையில்லை என்று குறிப்பால் வேட்கையுரைத்தலை அடிப்படையாக கொண்டே படைக்கப்பட்டுள்ளது. தலைவி பாத்திரப் படைப்பாக்கம் ஒரு வரையறைக்குள் கொண்டு வரும் முயற்சி தொல்காப்பியரின் களவியல் உருவாக்கத்தில் முழுமையடைந்துவிட்டது. தொல்காப்பியரின் இலக்கணம் இலக்கியத் திணை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டது. தொல்காப்பியரின் விதி மீறிய தலைவியின் பாத்திரப் படைப்பாக்கம் இலக்கியத்தில் நிகழ்ந்துள்ளது. தலைவியின் முதன்மைப்பண்புகளில் அச்சம் நீக்க முடியாத ஒன்று என்று குறிப்பிட்டு பின்பு அச்சம் நீக்கம் சார்ந்த நிலைகளைப் பட்டியலிடுகிறார்.

### முடிவுரை

தலைவியின் பண்புகளில் அச்சம் முதன்மையான பண்பாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. அவளது பண்புகளில் அச்சமே தலைவனைக் காணும் பொழுது மற்ற பெண்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டி பின்பு அவன் என் தலைவன் என்பதை உறுதிசெய்யும் கருவியாக அமைகின்றது. பொதுவாக பெண்கள் ஆடவரை அணுகுதல் என்பது அச்சம் தோன்றும் என்று குறிப்பிட்டு இலக்கணம் தந்துள்ளனர். எங்கிருந்தோ ஒரு விலங்கினைத் தேடி தலைவன் வரும்போது தலைவி மட்டும் அச்சப்பட்டு மறைவதாகவும் மற்ற பெண்கள் இயல்பாக அணுகுவதாகவும் பாத்திரப்படைப்பு நிகழ்ந்துள்ளது. பெண்களின் ஆயம் எனும் பொழுது அனைவரும் பெண்கள் தானே தலைவனைக் கண்டு அனைவரும் அச்சப்பட்டதாகக் குறிப்பு சில இடங்களில் சுட்டப்படாலும் தோழி முன்பு நின்று வினவும்வகையில் அமைகின்றது களவியல். தலைவியின் அச்சமே தலைவனுக்கு தலைவியை காட்டும் முதன்மையானக் கருவியாக அமைகின்றது. தலைவனைக் கண்ட பொழுது மறைந்து நான் தான் உனக்கானப் பெண் என்று பாலதாணையான் கூட்டுவிக்கும் நிகழ்ச்சி அப்பொழுது தொடங்கி, தெய்வமோ? மானிடப் பெண்ணோ? என்ற ஐயம் களைதல் கருவியில் துணிவு பெற்று பின்பு அச்சம் களையும் வேட்கை வழி களவியல் அமைவது புலனாகின்றது.

### பார்வை நூல்கள்

1. தொல்காப்பியர், தொல்காப்பியம்.
2. இரா.அறவேந்தன், படைப்பாளுமை.